சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi latara l Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# நிலவியல் அடிப்படையில் மருதத்திணை கருப்பொருள்கள்

பொ. அருள்

தமிழ் உதவிப்பேராசிரியர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

பண்டைத் தமிழகம் நிலவியல் அடிப்படையிலான பாகுபாட்டைக் கொண்டு விளங்கியது. சங்க காலச் சமுதாயம் திணைநிலைச் சமுதாயம் எனப்பட்டது. மலை, காடு, வயல், கடல், சுரம் என்னும் நிலவியல் தோற்றங்களின் அடிப்படையில் திணை வரையறுக்கப்பட்டிருந்தது என்பதை இக்கட்டுரை நிலவியல் அடிப்படையில் மருதத்திணை கருப்பொருள்களை ஆராய்கிறது.

## கருப்பொருள்கள்

திணைகளின் அடிப்படைப் பொருள்களான முதல், கரு, உரி என்னும் மூன்றில் நிலத்தாலும் காலத்தாலும் தோன்றும் பொருள்கள் கருப்பொருள்களாகும். நிலமும் காலமும் கருப்பொருள்களின் தோற்றத்திற்குக் காரணமாகின்றன. தொல்காப்பியர் கருப்பொருள்களை எட்டாகக் குறிப்பிட்டு இன்ன பிறவும் எனக் குறிப்பாக உணர்த்துகிறார்.

"தெய்வம் உணாவே மாமரம் புன்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"
(தொல். பொருள். அகத். சூ. 30)

கருப்பொருள்கள் ஒரு நிலத்திற்குரிய பொதுவும் சிறப்புமான பண்புகளைக் கொண்டு அமைகின்றன. ஒவ்வொரு திணையும் தன்னகத்தே மாறுபட்ட தாவரவியல் மற்றும் விலங்கியல் சூழல்களைக் கொண்டு அமைவதைக் கருப்பொருள்களின் வழி அறியலாம்.

"காடு மலை வயல் கடல் பாலை என்ற இடஞ்சார்ந்து பொழுது
விடியும் மடியும் கதிர் விடிவிற்கும் முடிவிற்கும் இடைப்பட்ட
பகல் இரவைச் சார்ந்து உலகு இயங்கும். அவ்வுலகின் பருவங்களுக்கு
ஏற்ப உயிர்கள் தவிக்கும் தழைக்கும் பிழைக்கும். நிலத்தோற்றம்
முன்னது. அதன்கண் உயிர்த்தோற்றம் பின்னது. எனவே,
முன்னதாகிய நிலத்தோற்றத்தையும் அதற்குரிய பொழுதுகளையும்
முதற்பொருள் என்றனர். அவற்றைச் சார்ந்து தோன்றும் பொருள்களை
இரண்டாவது ஆக்கிக் கருப்பொருள் என்றனர்".
(க. ப. அறவாணன், முற்குறித்த நூல், ப. 107)

என்று க. ப. அறவாணன் கருப்பொருளுக்கு விளக்கம் தருவர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலங்கள் நிலத்தாலும், காலத்தாலும் மாறுபட்ட அமைப்பினை உடையவை என்பதால் அங்கு தோன்றும் பொருள்களும் மாறுபட்டனவாக உள்ளன. அப்பொருள்களின் அடிப்ப்டையில் மக்கள் வாழ்க்கையும் அமைகிறது.

## தெய்வம்

மருத நிலத்திற்குரிய தெய்வம் இந்திரன். இந்திரனை தொல்காப்பியம் வேந்தன் எனக் குறிப்பிடுகிறது. "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" (தொல். பொருள். அகத். சூ. 5) தொல்காப்பியம் குறிப்பிடும் வேந்தன் என்னும் சொல் மன்னனைக் குறிக்கும் சொல் என்று குறிப்பிடுவர். நாடாளும் மன்னன் சீ ரிய நடுநிலையான ஆட்சித்திறம் உடையவன் எனில் நாடு நலம்பெறும் என்னும் நிலையில் வேந்தன் என்னும் சொல்லுக்கான பொருள் ஆளப்பட்டது. க. வெள்ளை வாரணன்,

"நாகரிகம் உருப்பெறுவதற்கு இடனாகிய மருதநிலமக்கள்
தம்நாட்டு வேந்தனையே மதித்தல் போற்றி அவனது
ஆணைவழி ஒழுகினமையால் வேந்தன் மேய தீம்புனல்
உலகம் என்ற தொடரால் மருத நில்துக்குத் தெய்வ
மாவான் வேந்தனே எனத் தொல்காப்பியர் குறிப்படு வாராயினர்".
(க. வெள்ளை வாரணன், சங்ககாலத் தமிழ் மக்கள், ப. 13)

என்று குறிப்பிடுவது கருதத்தக்கது. இந்திர வழிபாடு பண்டைக் காலம் தொட்டே நிலவி வந்தது. இந்திரன் வேத காலத்தில் சிறப்பிடம் பெற்ற கடவுளாகக் கருதப்பட்டான். மழை வேண்டி எடுக்கப்படும் இந்திர விழா புகழ் பெற்றதாகும். என்னும் சிந்தனை நாடாளும் மன்னன் வேந்தன் என்னும் கருத்திற்கு அரண் செய்வதாக அமைவதால் வேந்தன் என்று தொல்காப்பியர் கூறும் மருத நிலத்தின் கடவுள் என்னும் சிந்தனை, முறைவழி ஆட்சி செய்யும் மன்னனைக் குறிக்கும் என்பது விளங்கும்.

### திணைக்குரிய மக்கள்

கருப்பொருளில் தெய்வத்தை அடுத்து இடம்பெறுவது மக்கள். மருதத்திணைக்குரிய மக்கள் இன்னார் என்பதை இலக்கண நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. நம்பியகப்பொருள்,

"ஊரன் பைந்தர் மகிழ்நன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி
உழவர் உழத்தியர் கடையர் கடைசியர்"
(நம்பியகப் பொருள், 23:1-3)

என்னும் நூற்பாவின் வழியாக ஊரன், மகிழ்நன், மனைவி, கிழத்தி, உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் ஆகியோரைத் திணைக்குரிய மக்களாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஊரன், மகிழ்நன், மனைவி, கிழத்தி என்னும் பெயர்கள் திணைக்குரிய தலைவன் தலைவி பெயர்களாகவும் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்னும் பெயர்கள் திணைக்குரிய அடிப்படை மக்கள் பெயர்கள் என்பதையும் அறிய முடிகிறது.

மருத நிலப் பாடல்கள் தலைவனை நிலத்துடன் நிலவளத்துடன் சேர்த்து அழைப்பதைப் பாக்களில் காண முடிகிறது. "யாணர் ஊரன் வாழ்க" (ஐங். 1:4) "தண்டுறை ஊரன்" (ஐங். 2:5) "பூக்கநல் ஊரன்" (ஐங். 3:5) "கழனி யூரன்" (ஐங். 4:5) "துறைகேழ் ஊரன்" (ஐங். 12:2) "மணித்துறை ஊரன்" (ஐங். 14:3) "வேழ மூதூர் ஊரன்" (ஐங். 15:3) "புதன்மிசை நடுங்கும் வேழ வெண்பூ/ விகம்பாடு குருகிற் தோன்றும் ஊரன்"(ஐங். 17:12) தலைவனை ஊரோடு சேர்த்து வழங்கும் வழக்கம் இருந்தமை மேற்கண்ட சான்றுகளின் வழி விளங்கும். தோழி வாயில் வேண்டி நிற்கும் தலைவனை மகிழ்ந என்று அழைப்பதைக் குறுந்தொகைச் செய்யுள் பதிவு செய்துள்ளது.

"தொண்டி அன்ன என்நலம் தந்து
கொண்டனை கென்மோ- மகிழ்ந- நின் சூளே"
(குறுந். 238:4, 5)

தலைவி, தலைவன் குறித்துத் தோழியிடம் பேசும்போது தலைவனைக் கொழுநன் என்று அழைக்கும் வழக்கத்தைக காண முடிகிறது.

"____________________சேயிழை அந்தில்
கொழுநற் காணிய அளியேன் யானே"
(குறுந். 293:7, 8)

தோழி தலைவியை அழைக்கும்போது "யாய்" (ஆல்) என்னும் பெயரால் அன்புடன் அழைப்பதைக் காண முடிகிறது. "என வேட்டோனே யாயே" (ஐங். 1:3, 2:3) மருத நிலத் தலைவி மனையோள் (இல்லத்தரசி) என்னும் பொருளில் அழைக்கப்பட்டாள். மருத நிலம் வளம் பொருந்திய நிலமாக இருந்த காரணத்தால் அவ்வளத்தின் அடிப்படையிலேயே பெயர்களும் அமைந்தன.

உழவுத் தொழில் செய்யும் மக்களைக் குறிக்கச் சங்க இலக்கியம் முழுமைக்கும் பல்வேறு

பெயர்கள் பயின்று வந்துள்ளன. "உழவன்" (குறுந். 131:5) "ஏரின் வாழ்நர்"(புறம். 375:6) "அரிஞர்" (அகம். 84:12) "அரிவார்" (குறுந். 375:4) "களமர்" (பொருந. 194) "உழுது உண்போர்" (புறம். 387:25). இலக்கண நூல்கள் கூறும் திணைக்குரிய பெயர்கள் ஒன்றுளம் மாறியும் காணக் கிடைக்கின்றன

**விலங்குகள்**

மருதத்திணைக்குரிய விலங்குகளாக எருமை நீர்நாய் ஆகியன குறிப்பிடப்படுகின்றன.

> "எருமை அல்லது நீர் எருமை என்ற விலங்கு பாலூட்டிகளில்
> ஒன்றாகும். இவற்றிடையே சிற்றின, பேரின வேறுபாடுகள் உண்டு.
> இருப்பினும் எருமை என்ற சொல் பொதுவாக வீடுகளில் வளர்க்கப்படும்
> எருமையையே குறிக்கிறது. இந்த எருமையின் தாயகம் இந்தியா எனப்
> பெரும்பான்மையான பரிணாம மரபியல் ஆய்வுகள் கூறுகின்றன". (www. wikipeadia. com)

என்று விக்கிப்பீடியா கருத்துரைக்கிறது. எருமை எல்லாச் சூழல்களிலும் குறிப்பாக மருதம், நெய்தல், முல்லை ஆகிய இடங்களில் வாழும் இயல்புடையது. குறிஞ்சியில் காட்டெருமை காண முடிகிறது. எனினும் எருமை மருத நிலத்திற்கே சிறப்பாக உரியதாகக் காட்டப்படுகிறது. எருமை கருமை நிறமும் திண்ணிய தோலையும் சுருண்டு வளைந்த கொம்பினையும் உடையதாக அமைந்திருக்கும். சுருண்ட கொம்பினையும் ஆழ்ந்த கரு நிறம் உடையது எருமை என,

> "நெறிமடுப்பு எருமை நீல இருப்போத்து" (ஐங். 91:1)

என்னும் அடியால் ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. "கருங்கோட்டு எருமை" (ஐங். 92:1) என்னும் சான்றால் கொம்பின் நிறம் கருமை நிறம் என்பதை அறிய முடிகிறது. புறநானூறு மருத நில ஊர்களில் வாழும் எருமையின் கொம்புக்குக் காய்ந்த பயற்றின் கெற்றினை உவமையாகக் கூறியுள்ளது" (புறம். 297:2, 3). எருமை நெய்தல் மலர்களை விருப்பமுடன் தின்னும் இயல்புடையது (பதிற். 3, 4). முல்லை நமில மகளிரும் எருமை வளர்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் "நெல் விற்றமைக்கு ஈடாகப் பால் கறக்கும் எருமையை வாங்கியதாக" பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது (பெரும்பாண். 162-165). பட்டினப் பாலை வளமனைகளையும் வீட்டில் இருக்கும் நெற்குதிர்களையும் குறிப்பிடும்போது, "கதிர்களைத் தின்ற எருமைக் கன்று நெற்கூடுகளின் நிழலில் உறங்கும்" (பட்டினப். 13-15) என்று குறிப்பிடுகிறது. "எருமை தான் ஈன்ற கன்றினை விட்டுப் பிரியாத இயல்புடையது" என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது (குறுந். 181:3-5) எருமையின் கழுத்தில் மணி கட்டப்பட்டிருந்தது (குறுந். 279:1-3). அகநானூறு எருமையின் தோற்றத்தைக் கல்லுக்கு உவமித்துள்ளது. இதனை,

> "நல்குவரப் பணைத்த திரிமருப் பெருமை
> மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்
> சிறுதொழில் மகாஅர் ஏறிச் சேணார்க்குத்
> துறுகல் மந்தியின் தோன்றும் ஊரன்" (அகம். 206:3-6)

சிறுவர்கள் எருமையின் மீது அமர்ந்திருக்கும் காட்சி கல்லின் மீது மந்தி அமர்ந்திருந்த காட்சிக்கு ஒப்பாகப் பாடலில் பதிவு பெற்றுள்ளது. எருமையின் ஆண் ஏறு என்றும் போத்து என்றும் வழங்கப்பட்டமையினை அறிய முடிகிறது. "நெறி மருப்பு எருமை நீல இரும்போத்து" (ஐங். 91:1). எருமை நீரைச் சார்ந்து வாழும் இயல்புடையது.

> "வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
> பனிமலர்ப் பொய்கைப் பகல்செல் மறுகி
> மடக்கண் எருமை மாண்நாகு தழீஇப்
> படப்பை நண்ணிப் பழனத் தல்கும்" (அகம். 146:1-4)

இப்பாடலடிகள் எருமை சேறும் சகதியுமான பழனத்தில் தங்கும் இயல்புடையன என்பதைக் குறிப்பிடுகின்றன.

மருதம் நிலவளம் தாவர வளம் நிறைந்த காரணத்தால் நெல், குவளை, ஆம்பல் முதலானவை செழித்திருக்கும். எருமை இவற்றை உணவாகக் கொள்ளும் இயல்புடையது. "கருமை நிறமான கொம்பினை உடைய எருமை தெளிவான நீர் கலங்குமாறு ஆம்பல் இலைக்ள கிழியுமாறு மிதித்துக் குவளை மலர்களைத் தின்னும்" (அகம். 56:2-7) விடியற்காலையில் ஆம்பல் மலர்களைத் தின்னும் (அகம். 100:16-18). காவலை மீறிக் காலை வேளையில் நெற் கதிரைத் தின்னும் இயல்புடையது (ஐங். 95:1-2) மருதத்திற்குரிய விலங்கான எருமையின் இயல்பு உணவு முறை என்பன இலக்கியத்தில் பகிற பெற்றுள்ளன.

மருத நிலக் கருப்பொருள்களுள் ஒன்றான நீர்நாய் குறித்த குறிப்புகளும் சங்க இலக்கிய மருதப் பாக்களின் வழியே அறியக் கிடக்கின்றன. நீரில் வாழக்கூடிய இயல்புடையது நீர்நாய். நீர்நாயின் இயல்பு செயல்பாடுகள் ஆகியன மருதப்பாக்களின் வழியாக அறியப்படுகின்றன. "நீரைத் தங்கும் இடமாகக் கொண்டு நீர்நாய் காலை வேளையில் வாளை மீன்களை உணவாகக் கொள்ளும்" (ஐங். 63:1ளு புறம். 283:2). "தான் வாளை மீனை உண்ணுவது மட்டும் அல்லாமல் ஆண் நாய் குட்டியினை ஈன்ற பெண் நாயிக்கு உணவு கொடுக்கும் பொருட்டு நீரில் வாளை மீனை வேட்டையாடும்' (அகம். 336:4) என்று அகநானூறு குறிப்பிடுகிறது. நீர் நாய் கூர்மையான பற்களை உடையது. (அகம். 6:18). கோடுகள் பொருந்திய முதுகினை உடையது (குறுந். 364:1). கருமை நிறமான கழி நீரிலும் நீர்நாய் வாழும் இயல்புடையது. நீர்நாயின் குட்டி மீன்களைத் தின்று மரப் பொந்துகளில் துயில் கொண்டமையினை நற்றிணை பதிவு செய்துள்ளது (நற். 390:2).

*மருத நில நீராதாரங்கள்*

மருத நில வளமாக இடம்பெறும் கருப்பொருள் நீர், ஆறு, குளம், பொய்கை, மனைக் கிணறு முதலான நீராதாரங்கள் மருத நில வளத்திற்குக் காரணமாகின்றன. மருத நில நீராதாரங்களுள் பொய்கை ஊருக்கு அருகாமையில் இயற்கையாக அமைந்திருந்தது. பல்வேறு மலர்கள் தாவரங்கள், மீன்களின் வாழிடமாகவும் இருந்தது. பொய்கை குறித்த செய்திகள் சங்க இலக்கியப் பாக்களில் இடம்பெற்றுள்ளன.

பொய்கையின் அமைப்பு அழகு முதலான சிந்தனைகள் நுட்பமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. "பொய்கை பரப்பால் விரிந்திருந்தது" (அகம். 306). அதிகமான நீர்ப்பரப்பைக் கொண்டதாகப் பொய்கை விளங்கியது" (ஐங். 70), "இனிய நீரை உடையதாகவும் அழகிய குளிர்ந்த நீரை உடையதாகவும் விளங்கியது" (ஐங். 44ளு குறுந். 354), "பல்வகை மலர்கள் வளமுடன் மலர்ந்து அழகு செய்த காரணத்தால் ஐங்குறுநூறு மலர்ந்த பொய்கை" (ஐங். 6) என்று குறிப்பிடுகிறது. மருத நிலம் சார்ந்த நீர் வாழ் தாவரங்கள் பொய்கையில் நிறைந்து வளர்ந்தன. தாமரை, ஆம்பல் முதலான மலர்கள் மலர்ந்து அழகு செய்தமையினைப் பின்வரும் சான்றுகளான் அறிய முடிகிறது. "மலர்ந்த பொய்கை முகைந்த தாமரை" (ஐங். 6), "பொய்கைப் பூத்த புழைக்கால் ஆம்பல்" (ஐங். 34).

தலைவனின் சிறப்பைக் கூற வரும்போது தலைவன் பெயரோடு சேர்த்துப் பொய்கையும் வழங்கப்பட்டது. "பொய்கையூரன்" (குறுந். 6) என்னும் சான்று இதனை உறுதிப்படுத்தும். பல்வகை மீன்கள் பொய்கையில் நிறைந்திருந்த காரணத்தால் மீனை உண்டு வாழும் நீர் நாய்களும் பொய்கையைச் சார்ந்து வாழ்ந்தமையை.

"வாளை நாளின் பழழ நாளும்
பொய்கை நீர்நாய் ஆவகுதுயில் ஏற்கும்"
(நற். 390)

என்னும் சான்றால் அறியலாம். பொய்கை, நீர்நாய், எருமை, ஆமை முதலியவற்றின் இருப்பிடமாகவும் விளங்கியது.

கருப்பொருள்களுள் ஒன்றான குளம் செயற்கையாக மனிதனால் உருவாக்கப்படுவதாகும்

இதனை, "குளம் தொட்டு வளம் பெருக்கி" (பட்டினப்.) என்னும் சான்றால் அறியலாம். குண்டு, குளம், கலம் முதலான பெயர்களால் குளம் அழைக்கப்பட்டது. அகன்றதாகவும் ஆழம் மிக்கதாகவும் குளங்கள் விளங்கின. இயற்கை சான்ற இடங்களில் குளங்கள் இருந்தன. "பொய்கை மட்டுமன்றிக் குளங்களிலும் எருமைகள் இருந்தன என்பதை அறிய முடிகிறது" (ஐங். 94:1-3). குளங்கள் மீன்வளம் மிக்கனவாக இருந்தன. "மீன் முதிர் இலஞ்சிக் கலிந்த தாமரை" (அகம். 186:3). குளங்களின் அருகாமையில் நீர்முள்ளிச் செடிகள் காணப்பட்டன என்பதை அகநானூறு குறிப்பிடுகிறது.

"பணிமருள் மலரமுள்ளி அமன்ந
துணிநீர் இலஞ்சிக் கொண்ட பெருமீன்"
(அகம். 236:1-2)

குளம் மனிதர்களால் உருவாக்கப்பட்டன எனினும் இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் இடங்களாகவும் இருந்தன. இயற்கையாக வளர்ந்த தாவரங்கள், நீர் சார்ந்த உயிர்கள் ஆகியவற்றைக் காக்கும் இடமாகவும் குளங்கள் இருந்தன.

மருத நிலத்திற்கு நீர்வளம் அளிக்கும் நீராதாரங்களுள் ஒன்று ஆறு. இந்திய சமுதாயத்தில் ஆறு வணக்கத்திற்குரியதாகவும் வழிபாட்டிற்கு உரியதாகவும் இரப்பதை அறிய முடிகிறது. மருத நிலத்தில் அமைந்த வளத்திற்கு ஆறுகள் பெருமளவில் உதவியுள்ளன என்பதை இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. "மருத நில ஆறுகள் கோடையிலும் கார் காலத்திலும் நீர்வளம் மிகுந்து காணப்பட்டன" (ஐங். 45:1-3). நகரத்தின் பரந்த தெருக்களுக்கு ஆறுகள் உவமை கூறப்பட்டன.

சங்க இலக்கியங்களில் காவிரி, வையை, ஆகிய ஆறுகளைக் குறித்த செய்திகளும் மேற்கொள்ளல் பட்ட வழிபாட்டு முறைமைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வயல்கள் சார்ந்த பகுதியின் ஊடாகச் சென்ற ஆற்றின் கரைகளில் நகர வாழ்க்கை சிறந்தது. விழாக்கள் பெருகின. மருத நிலக் கட்டமைப்பிற்கு ஆறுகள் பேருதவி புரிந்தன.

## முடிவுகள்

மருதம் ஐவகை நிலப் பாகுபாடுகளுள் ஒன்று மருதம், மருதம் சார்ந்த இடத்தை நிலமாகவும் பெரும்பொழுதுகள் ஆறையும் வைகறை வழியில் என்னும் சிறுபொழுதுகளையும் தனதாகக் கொண்டது. மருத நிலச் சூழலில் உருவான பொருள்கள் கருப்பொருள்களாக அறியப்படுகின்றன. பண்டைய நிலப்பாகுபாட்டில் திணை என்னும் சொல் ஒழுக்கத்தைக் குறித்தது. மருதத்திணை நீர்வளம், நிலவளம் நிறைந்த இடமாக அறியப்படுகிறது. வயல், பழனம், செறு, கழனி முதலான சொற்கள் நிலத்தைக் குறிக்கப்பயன்பட்டன. வயல்களில் நெல் கரும்பு ஆகியன செழித்து வளர்ந்தன. பழனம் என்பது வயலில் எஞ்சிய நீர் தங்கும் சேறும் சகதியும் நிறைந்த இடமாக இருந்தது. மருதம் நீர்வளம் உள்ள இடமாதலின் உயிரினச் சூழலும் தாவரச் சூழலும் நிறைந்திருந்தது. மருதத்தின் சிறுபொழுதுகளான வைகறையும் விடியலும் திணை ஒழுக்கத்திற்கும் வாழ்வியல் கட்டமைப்பிற்கும் உரிய பொழுதுகளாக இருந்தமை அறியப்படுகிறது.

## துணைநூல்கள்


- வாழ்வியல்களஞ்சியம். தொகுதி. 3.
- ஞா. தேவநேயப்பாவாணார். பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்.
- உ. வே. சாமிநாதையர், சைவசித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம், சென்னை
- எட்டுத்தொகைகள் எட்டும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- கைலாசபதி. க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் வெளீட்டகம். சென்னை.
- முனைவர். சாரங்கபாணி, இரா. சங்கத் தமிழ் வளம். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
- தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. மீனாட்சிப் புத்தக நிலையம், மதுரை.
- www. googlescholar. com


௸